# ஹிந்தி எதிர்ப்புப் போர் படைத் தலைவர்கள் வருகை.

ஈ. வெ. ரா, கே.எம். பாலு, நடேசன், முதலியவர்களுக்கு "ஜஸ்டிஸ்" ஆபீசில் **வரவேற்பு.**

**ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியாருக்கு தலைவர்களது நல்லுரை.**

ஹிந்தி எதிர்ப்புத் தொண்டர்கள் ஊக்கம்.

வேலூர், மே. 31,

வைக்கம் வீரர் தன்னுணர்ச்சித் தலைவர் தோழர் ஈ வெ. ரா அவர்களும், இளந்தமிழ் வீரர் கே எம். பாலசுப்பிரமணியம் அவர்களும், சேலம் நடேசன் அவர்களும், எஸ். டி. சண்முகப் பட்டணம் பொடி சொந்தக்காரர் அவர்களும், திருச்சிக் காரியக் கமிட்டிக் கூட்டத்திற்குச் சென்று விட்டு, கோயமுத்தூர் கூட்டத்துக்குப் போயிருந்து சென்னை செல்லும் வழியில் சார்வாயிலாக இன்று காலை 8 மணிக்கு இங்கு வந்தார்கள். உடனே நகரெங்கும் செய்தி தெரிந்து பல சுயமரியாதை, ஜஸ்டிஸ், ஹிந்தி எதிர்ப்புத் தொண்டர்கள் முக்கியவர்கள் கூடிப்பெருமகிழ்ச்சியோடு வரவேற்று வணக்கம் செலுத்தினார்கள். பிறகு தலைவர்களைத் தோழர்பொன்ரங்கம் போட்டோ ஷாப்பிலிருந்து லாங்கு பஜார் 106ம் எண் கட்டிடத்திலுள்ள வடார்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கமிட்டிப் பணிமனைக்கு பெருங் கூட்டம் புடைசூழ அழைத்துச் சென்றார்கள். ஜஸ்டிஸ் பணி மனையில் தோழர்கள் ஈ. வெ. ரா. அவர்களுக்கும், கே. எம், பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், ஜஸ்டிஸ் கமிட்டிப் பொருளாளர் தோழர் எ. எஸ் நமசிவாயம் அவர்கள் மலர் மாலைகள் சூட்டி மகிழ்வித்தார். திருச்சிக்கூட்டம் முடிவு திட்டங்கள், ஜில்லா போர்டு தேர்தல், வேலூர் ஹிந்தி எதிர்பாளர் மகாநாடு, ஹிந்திஎதிர்ப்பு முறைகள், ஹிந்தி எதிர்ப்புத் தொண்டர்கள் நடந்துகொள்ள வேண்டிய வகைகள் முதலியன குறித்துச் சில நிமிஷ நேரம் பேசிவிட்டுத் தொண்டர்களுக்கு ஊக்கங்கொடுத்துவிட்டுச்சென்றனர். ஹிந்தி எதிர்ப்புத் தொண்டர்களும், ஈ, வெ. ரா. முதலியவர்களும் அடங்கிய போட்டோ ஒன்று எடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஹிந்தி எதிர்ப்புத் தொண்டரும் கை குலுக்கி வணக்கம் செலுத்தி வழியனுப்பினர்.

3-6-38ல்வேலூரில்கோட்டை வெளியில் தமிழ்நாடுஹிந்திஎதிர்ப்புக்காரியக் கமிட்டியார் ஓர்பொ

---

கிரகப் படையில் சேர்ந்து சிறை புகவும் உயிரை தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறேன். என் சகோதரன் எஸ். வி. சிதம்பரத்தையும் அனுப்புகிறேன்.

எஸ் வி. ராமய்யா.

---

## காஞ்சிபுரம்

காஞ்சிபுரம், ஜூன், 1

ஹிந்தியை எதிர்த்துச் சிறை செல்ல காஞ்சிபுரம் தாமல்வார் வீதி தோழர்கள் ஏழுமலை, அருணாசலம், செங்கழினீர். ஓடைவீதி தோழர் சி. வி. எம். அண்ணாமலை, காமாட்சியம்மன் சந்நிதி வீதி தோழர் வாதராஜு முதலியவர்கள் முன் வந்திருக்கிறார்கள். (ஓ-நி)

---

# 17-வது ஹிந்தி ஒழிப்புக் கூட்டம்.

## நுங்கம்பாக்கத்தில் மாபெருங் கூட்டமும் ஊர்வலமும்.

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 2.

1-6-38 மாலை 5 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் ஹிந்தி ஒழிப்புக் கூட்டமும் ஊர்வலமும்நடைபெற்றன. ஊர்வலத்தில் உண்ணாநோன்பி தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்கள் கலந்துகொள்ள முடியாமற் போனதால் அவருடைய உருவப்படத்தை ஊர்வலமாகக் கொண்டுவந்தார்கள். "ஹிந்தி ஒழிக" "தமிழ் வாழ்க" "மந்திரி சபை ஒழிக" "ஸ்டாலின்வாழ்க" என்னும் கொடிகளுடனும் ஆரவாரத்துடனும் ஹிந்தி ஒழிப்புப் பாடல்கள் பாடிக்கொண்டும் ஊர்வலம் தெருக்கள் வழியே சென்று கடைசியாய் நுங்கம்பாக்கம் ஏரி மைதானத்தில் வந்து சேர்ந்தது. கூட்டத்தில் 2000 பேர்களுக்குமேல் பெருந்திரளாகக் காணப்பட்டனர். தோழர் சுவாமி சண்முகானந்தர் அவர்கள் தலைமை பூண்டார்கள். சுவாமி அருணகிரி நாதர் தமிழ்க்கொடி பாட்டைப் பாடியதோடு ஹிந்தியை ஏன் ஒழிக்க வேண்டும் என்பது பற்றிப்பேசினார்கள். பிறகு மீனாம்பாள் சிவராஜ் அம்மையார் தமிழின் பெருமையை எடுத்துச்சொல்லி, ஹிந்தியை நுழைத்தால் அதனால் நேரும் கெடுதிகளை விளக்கினார்கள். வேலூர் தோழர் அநுமந்தராவ் அவர்கள் மந்திரி ராஜகோபாலாச்சாரியின் சூழ்ச்சிகளை எடுத்துக்காட்டி ஹிந்தி ஏன் கூடாது என்பதை மிக்க ஆர்வமிக்க பேச்சுடன் விளக்கினார். பிறகு அநுமந்தராவ் அவர்களின் மைத்துனியார் தாய் பாஷையின் அவசியமும் ஹிந்தியின் அனாவசியமும் என்பதுபற்றிப் பேசினார். பிறகு தோழர்கள் இளங்கோவன் அவர்களும், மாணிக்கவாசகம் அவர்களும் ஊக்க உணர்ச்சியுடன் பேசினார்கள் பிறகு உண்ணாவிரதி தோழர் ஸ்டாலின் ஜகதீஸ் அவர்கள் கூட்டத்தில் பேச முடியாதது பற்றி ஒரு கடிதாசியில் தமது கருத்தை எழுதித் தெரிவித்தார். அதில் தாம் இன்னும் பத்து நாட்களுக்கு மேல் இருக்க முடியாதென்றும் தமக்கு ஏற்பட்டிருக்கும் பலவீனத்தினால், தான் இதனை உணருகிறதாகவும் குறிப்பிட்டபோது கூட்டத்திலிருந்த அனைவரும் மனமுருகி கண்ணீர் விட்டனர். பின்னர் வந்தனோபசாரத்துக்குப்பிறகு கூட்டம் 10-½ மணிக்குக் கலைந்தது.

---

துக் கூட்டத்தில் பேசுவார்கள் அதுகாலை தோழர்கள் எஸ் சோமசுந்திரபாரதியார், ஈ. வெ. ராமசாமி, கே. எம். பாலசுப்பிரமணியம் டபுள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன், டி. வி, உமாமகேசுவரன் பிள்ளை, கே. ஏ. பி. விசுவநாதம் முதலியவர்கள் 'ஹிந்தியால் தமிழுக்கும், தமிழர்களுக்கும் நேரும் இன்னல்கள்' என்பது குறித்து அறிவு தரும்-ஆண்மைதரும் சொல்லாடல் செய்வார்கள். நகரெங்கும் தோழர் ஈ. வெ. ரா. வருகை குறித்தும், ஹிந்தி எதிர்ப்புப் போரைக்குறித்தும் பரப்பரப்பும் பேச்சாகவுமிருக்கிறது. தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களது உண்ணாவிரத உறுதி பற்றியும் ஆச்சாரியாரின் ஆணவக் கொடுங்கோன்மை மனதைக் குறித்தும் மக்கள் பேசாநிற்கின்றனர்.